பக்கங்கள் : ஆறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 27 வியாழக்கிழமை (11.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 47

## வடக்கு - கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் நிபந்தனையின்றி ஆதரவு தரப்போவதில்லை

### அதிகாரப் பகிர்வு பற்றி தமிழர் தரப்பிலிருந்து தெளிவான உறுதிமொழி வழங்கப்பட வேண்டும்

**- நாடாளுமன்றத்தில் நேற்று ஹக்கீம் அறிவிப்பு -**

கொழும்பு, ஜனவரி 11

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் நிபந்தனையின்றி ஆதரவு தரவேண்டும் என்று கோருவதை ஏற்கமுடியாது. இணைந்த வடக்கு - கிழக்கிற்குள் முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் அதிகாரம் என்ன என்பது பற்றித் தமிழர் தலைமைகள் தெளிவான உறுதிமொழிகளைத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் இணைப்புக்கு ஆதரவு கோரினால் ஒருபோதும் நிபந்தனைகளற்ற முறையில் முஸ்லிம்கள் இணைப்புக்கு ஆதரவு வழங்க முன்வர மாட்டார்கள்.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. மாணவன் நிருபராஜ் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

கொக்குவில் பகுதியில் கடந்த 3ஆம் திகதி முதல் காணாமற்போன யாழ்.பல்கலைக்கழகவிஞ்ஞான பீடத்தின்இறுதியாண்டு மாணவனான அருணகிரிநாதன் நிருபராஜ் நேற்று அதிகாலை விடுவிக்கப்பட்டார்.

இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட பிரஸ்தாப மாணவன் நேற்று அதிகாலை வேளை கொக்குவிலில் உள்ள அவரது வீட்டுக்கு முன் கண்கள் கட்டப்பட்ட நிலையில் விடப்பட்டுள்ளார். அவரது பெற்றோர் மாணவனை மீட்டு, நேற்று காலை யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

பிரஸ்தாப இளைஞன் விடுவிக்கப்பட்டமை தொடர்பாகவும் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவது தொடர்பாகவும் அந்த மாணவனின் நலனைக் கவனிக்கும் சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி தமக்குத் தகவல் தந்தார் என மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

பிரஸ்தாப இளைஞன் காணாமற்போனமை தொடர்பாக அவரது பெற்றோர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-1)

## வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றிய ஐ.தே.கவின் முடிவு அடுத்த வாரம்!



கொழும்பு, ஜன.11

வடக்கு-கிழக்கை மீண்டும் இணைப்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த வாரமளவில் தமது நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வடக்கு - கிழக்கு நிலைமை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ரணில் விக்கிரமசிங்கவை நோக்கி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குவிடையளித்தபோதே ரணில் விக்கிரமசிங்க

(06ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு இணைந்திருக்கும் நிலையில்தான் பிரிப்பு குறித்து வாக்கெடுப்பு நடத்த முடியும்

### தமிழர் தாயகத்தை துண்டாடும் ஆணை மஹிந்தவுக்கு தரப்படவில்லை என்கிறார் சம்பந்தன்



கொழும்பு, ஜன. 11

வடக்கும் - கிழக்கும் இணைந்திருந்தால் மட்டுமே அதனைப் பிரிப்பதா இல்லையா என்பது குறித்து வாக்கெடுப்பு நடத்த முடியும். வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் ஆணையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் வழங்கவில்லை.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் காட்டமாகக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன்.

வடக்குக் கிழக்கின் இன்றைய நிலை குறித்த சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை ஆரம்பித்துவைத்து பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியவையாவது:-

வடக்கு - கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானதென உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கவில்லை. இணைக்கப்பட்ட முறை பிழையானதென்றே தீர்ப்பளித்துள்ளது. வடக்கு-கிழக்கைப்

(06ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று பாடசாலைகள் அருகே இராணுவக் காவல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள சில முக்கிய பாடசாலைகளுக்கு முன்பாக நேற்று வழமைக்கு மாறாக பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது. அத்துடன், காலைநேரத்தில் - பாடசாலைகள் ஆரம்பமாகும் வேளையில் - படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை முதல் யாழ். நகரப் பகுதியின் முக்கிய வீதிகள் அனைத்திலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

பஸ்கள் வழிமறிக்கப்பட்டு பயணிகள் இறக்கப்பட்டு கடுமையாகச் சோதனையிடப்பட்டனர். மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் மற்றும் ஏனைய வாகனங்களில் பயணம் செய்தவர்களும் சோதனையிடப்பட்டனர். காலைவேளையில் -

(06ஆம் பக்கம் பார்க்க)

## சிறியரக மோட்டார் சைக்கிள்கள் பாவனைக்கு நேற்றுத் தடைவிதிப்பு

### பலரிடம் அவை பறிமுதல் செய்யப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன.11

குடாநாட்டில் சிறிய ரக மோட்டார் சைக்கிள்களில் மக்கள் பயணம் செய்வதற்குப் படையினர் நேற்று முதல் தடை விதித்துள்ளனர்.

'ஸூட்டி பப்', 'ரி.வி.எஸ்-49சிசி', 'சாளி' போன்ற மோட்டார் சைக்கிள்களில் சென்ற பொதுமக்கள் மறிக்கப்பட்டு, அந்த வாகனங்களில் பயணம் செய்வதை நிறுத்துமாறு படையினர் அறிவுறுத்தினர்.

இந்த நடைமுறை உடன் அமுலுக்கு வருவதாக அந்த வாகனங்களைப் பயன்படுத்துவோருக்குப் படையினர் நேற்று வீதிகளில் வைத்துத் தெரிவித்தனர்.

இந்த வகை வாகனங்களை இலகுவாகச் செலுத்தலாம் என்பதால் பெண்களே இவற்றை அதிகமாகப் பயன்படுத்து

(06ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு பிரிப்பு, இணைப்பு; இலங்கை அரசே தீர்மானிக்கவேண்டும்

### ஜனாதிபதியிடம் பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு

கொழும்பு,ஜன.11

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டது செல்லுபடியற்றது என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால், எழுந்துள்ள நிலையை எதிர்கொள்வது என்பது குறித்து இலங்கை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

இந்த விவகாரத்தில் இலங்கை அரசாங்கமே எவ்வாறு செயலாற்றுவது என்பதை முடிவு செய்யவேண்டும்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இவ்வாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தியாவில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் புதுடில்லியில் நடைபெறவுள்ள தென்னாசிய நாடுகள் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இலங்கை ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுவதற்காக அமைச்சர் முகர்ஜி இங்கு வந்துள்ளார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களுடன் அவர் கலந்துரையாடினார். அப்போதே மேற்கண்டவாறு சொன்னார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதியைச் சந்தித்தவேளை அவருடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சரும் சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் உடனிருந்தனர்.

எனினும், இந்திய அமைச்சரும் ஜனாதிபதியும் அரை மணி நேரம் இருவர் மட்டும் தனித்திருந்தும் பேச்சு நடத்தினார்கள்.

இந்திய வெளியுறவு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

★ இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணமுடியும் என்பதே இந்தியாவின் உறுதியான

(06ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதியைச் சந்திக்க போது...

## இந்தியாவில் இருந்து 525 தோன் பொருள்கள் தனியாரால் கப்பலில் எடுத்து வரப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன.11

இந்தியாவில் இருந்து 525மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்கள் கப்பலில் நேற்று பருத்தித்துறைக்கு தனியார் வர்த்தகரால் எடுத்துவரப்பட்டுள்ளன. யாழ். நகரில் உள்ள தனியார் வர்த்தகர் ஒருவர் ''ஹ்ண்ட்'' என்ற கப்பலில் சர்க்கரை, மிளகாய், உருளைக்கிழங்கு ஆகியவற்றை எடுத்து வந்துள்ளார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்

**அமரர் மயில்வாகனம் ஜெயக்குமாரன்**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்க எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பா.அ.சங்கம்,
யா/கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் இளையதம்பி இரத்தினசபாபதி (ஈரோஸ்)
(இணுவை மாறன்)

தோற்றம் 23.11.1938 — மறைவு 12.12.2006

எமது அன்பு மகனே ஏற்றம் தந்த செல்வ மகனே
பாசமிகு சகோதரனே - என்றும்
உள்ளம் நிறைந்த பெரியவரே
கண்டு களிப்போம் எனக் கனவுகண்டோம்
கடைசியில் காணக் கொடுத்து வைக்கவில்லை
நித்தம் நாம் கலங்குகின்றோம் - நின்
நினைவுகளிலே வாழுகின்றோம்
தங்கள் ஆத்ம சாந்திக்காக இன்றும், என்றும் பிரார்த்திக்கும்

குமாரலிங்கம் வீதி, இணுவில் கிழக்கு. — குடும்பத்தினர்.

## எம் விழி சொரியும் அருவிகளுடன் உன் ஓராண்டு



அன்னையின் மடியில் 25 - 12 - 1975

ஆண்டவன் அடியில் 11 - 01 - 2006

**செல்வி கணபதிப்பிள்ளை பவளராணி**

(தென்மராட்சி பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர் (B.A))

என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான் உன் ஆன்மாவை விட்டு உன் ஆருயிர் பிரிந்து ஆண்டொன்று ஓடியதே ஆனபோதும் ஆறவில்லை உன் உதிரத்து உறவுகளில் நெஞ்சக்குமுறல்கள் என்றும் உமது ஜீவன் நித்தியத்தில் இளைப்பாற எல்லாம் வல்ல குழந்தையேசுவிடம் வேண்டி நிற்கும்.

கண்டி றோட், சாவகச்சேரி. (65885) உமது நண்பர்கள், உறவினர்கள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **தம்பு செல்லமுத்து** (தம்பு ரீச்சர்)
(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர், யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி)

மலர்வு 29.04.1940 — உதிர்வு 26.12.2002

பேரோடும் புகழோடும் பெருமையாய்
வாழ்ந்த உங்கள் நினைவுகள்
காலங்கள் எத்தனை சென்றாலும்
எம் மனதை விட்டு நீங்காது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவேரகம்"
அல்லாரை, மீசாலை

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் நாகமுத்து சின்னையா (வீரவாகு)**

தோற்றம் 02.04.1939 — மறைவு 12.12.2006

12.12.2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்தும் கண்ணீர் அஞ்சலிகள் அனுதாபச்செய்திகள் பத்திரிகைளிலும் தொலை பேசிமூலமாகவும் தந்தி மூலமும் தபால் மூலமும் தொலைநகல் மூலமும் ஆறுதல் தெரிவித்தும் மற்றும் சகலவழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (11.01.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

6ஆம் வட்டாரம், நயினாதீவு. (A-51817) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வள்ளியம்மை கந்தையா (வள்ளியாச்சி)



வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரப்பங்குள ஒழுங்கை, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை கந்தையா நேற்று (10.01.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - செல்லம் தம்பதியரின் பாசமிகு மகளும் சின்னையா - பொன்னு தம்பதியரின் மருமகளும் தங்கமுத்துவின் அன்புச்சகோதரியும் கருணாவதியின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற அருளானந்தத்தின் மாமியும் வாகீசன், வசீகரன் ஆகியோரின் அருமைப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.01.2007 நேற்று நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 11/1, பிரப்பங்குள ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (65957)

தகவல்:
திருமதி அ.கருணாவதி (மகள்).

### ஆறுமுகம் தேவரத்தினம்

இளவாலை, முள்ளானையைச் சேர்ந்த ஆறுமுகம் தேவரத்தினம் 10.01.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (விதானையார்)-செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-பாக்கியம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இந்திராணியின் கணவரும் சசிகலா (விவசாயத் திணைக்களம், வவுனியா, கிழக்குப் பல்கலைக்கழகம்-விவசாய பீடம்), மனோராஜ் (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி-வவுனியா, முன்னாள் ஆசிரியர்-வவுனியா மத்திய மகாவித்தியாலயம்), சுஜாந்தினி (ஆசிரியை, செட்டித்தெரு மெதடிஸ்ட், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையும் யசோதாதேவி (இளைப்பாறிய ஆசிரியர், திருக்குடும்ப கன்னியர் மடம், இளவாலை), செல்வரட்ணம் (கனடா), Dr.சிவபாலசுந்தரம் (லண்டன்), செந்தில்வேல்ராஜா (ஜேர்மனி), குகலிங்கம் (லண்டன்), குமாரவேல் (லண்டன்), காலஞ்சென்ற விமலதேவன், விஜயன் (லண்டன்) ஆகியோரின் ஆசை அண்ணனுமாவார்.

அன்னாரது பூதவுடல் நேற்று மாலை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.3, சீனியர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

தகவல்:
பிள்ளைகள்.

விற்பனைக்கு
Japan Optoma Projector (New Model)
300 inch உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776141061,
0776623342

## கண்ணீர் அஞ்சலி

18.12.2006 திங்கட்கிழமை காலமான எமது பீட 3ஆம் வருட மாணவி ஜெயஹரி அவர்களின் அன்புத் தந்தை

**இரத்தினம் விஜயரெத்தினம்**

மற்றும் 27.12.2006 புதன்கிழமை அகாலமரணமடைந்த எமது பீட இறுதியாண்டு மாணவி காயத்திரி அவர்களின் சகோதரன்

**ஜெயவரதராஜா ஜங்கரதாஸன்**

ஆகியோரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1ஆம் வருட மாணவர்கள், விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

**செல்வி தே.சுஜாந்தினி** அவர்களின்

அன்புத் தந்தை

**ஆறுமுகம் தேவரட்ணம்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர்.
யா/ செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன்

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா தம்பையா

மந்துவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தம்பையா நேற்று (10.01.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் வாரித்தம்பி - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் யோகம்மாவின் அன்புக்கணவரும் பிரபாகரன் (லண்டன்), மனோகரன் (அபிவிருத்தி உதவி யாளர்-மாவட்ட செயலகம் யாழ்.), நிரஞ்சினி (லண் டன்), புஸ்பாகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவகுமாரின் (லண்டன்)மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2007) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எருவன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

டச்சு வீதி,
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### பாலகிருஷ்ணன் பரமேஸ்வரி

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் பரமேஸ்வரி நேற்று (10.01.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பாலகிருஷ்ணனின் அன்பு மனைவியும் இராமலிங்கம் தம்பதியரின் அன்பு மகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2007) வியாழக்கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய்
மேற்கு.

தகவல்:
பாலகிருஷ்ணன் (கணவர்.)

### தனபாலசிங்கம் பரமேஸ்வரி

மானிப்பாயைச் சேர்ந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்கள் 10.01.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் (இளைப்பாறிய வரி மதிப்பீட்டாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்), அன்பு மனைவியும் வனிதா, செந்திரு (கனடா), சேரன் ஆகியோரின் அன்புத் தாயும் மனோகரனின் (கனடா) அன்பு மாமியும் கஜானனின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10 மணிக்கு பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரத்தினவில்லா,
மானிப்பாய்.

தகவல்:
த.சேரன்.

### முருகேசபிள்ளை பரமானந்தம் (பாலு)

நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகேசபிள்ளை பரமானந்தம் 09.01.2007 செவ்வாய்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசபிள்ளை - அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் செல்லம்மாவின் அன்புக்கணவரும் பங்கையன் (பிரான்ஸ்), வாகினி (பிரான்ஸ்), பிரியவதனி ஆகியோரின் தந்தையும் ஆரணி (பிரான்ஸ்), தயாளன் (பிரான்ஸ்), உதயநேசன் ஆகியோரின் மாமனும் மங்களேஸ்வரி, நாகம்மா, காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், கணபதிப்பிள்ளை மற்றும் விசாலாட்சி (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கனகசபை, அம்பலவாணர், முத்தையா, சவுந்தரம் மற்றும் தங்கமுத்து, கந்தப்பு (லண்டன்), நடராஜா, கனகாம்பிகை (கனடா), பூபாலசுந்தரம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் நிரோஜா, பானுஜா ஆனோஜா, விதுஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 11.01.2007, 12.01.2007 ஆகிய தினங்களில் மு.ப 9மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 13.01.2007 சனிக்கிழமை காலை 9மணியளவில் சமயக்கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 11மணிக்கு தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அம்பலவாணர் சிவானந்தராஜா (மருகர்),
திருமதி செல்லம்மா பரமானந்தம் (மனைவி).

85/3, W.A சில்வா மாவத்தை, வெள்ளவத்தை.
தொ.பே: [illegible]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சரவணமுத்து தங்கராஜா

மலர்வு 19-03-1939 — உதிர்வு 12-12-2006

திதி: அபரபக்க அட்டமி

ஏற்றிய தீபமாக எங்களின் வாழ்வு ஓங்க
போற்றிய பணிகள் செய்து பொன்னெனப் பொலியக் காத்து
சாற்றிய உறுதியோடு சாதனைச் சமர்த்தராகி
ஆற்றிய அனைத்தும் நெஞ்சில் அகன்றிடா நினைப்பாய் நிற்க,
தோற்றிய தொடர்ச்சி நோயால் தொல்லைமேல் அல்லல் உற்று
மாற்றிய நிலையுமற்று மண்ணதைத் துறந்து போக
தேற்றிய மொழியு மற்று தேறிடாத் திகைப்பே உற்று
ஊற்றிய கண்ணீரோடு உலைந்தலைந்தழுகின்றோமே.

சரசாலை தெற்கு, சாவகச்சேரி. — மனைவி, பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**துரைச்சாமி குமாரசாமி**

தோற்றம் 06-09-1942 — மறைவு 12-12-2006

அம்மா சோதரியின் அன்பில் கட்டுண்ட அண்ணாவே! ஆறுதலின்றித் தவிக்கின்றோம், உனைப் பிரிந்ததனால் இம்மாநிலத்தில். எத்தனை ஆண்டுகள் உறவுகலையாமல் வாழ்ந்தீர்கள். இறைவன் தாளில் உங்கள் ஆத்மா சேரப் பிரார்த்திக்கின்றோம்.

முதலியார் லேன், நல்லூர் தெற்கு. (65885) அம்மா, சகோதரி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



**தர்மலிங்கம் சண்முகநாதன்** (பத்தர்)

தோற்றம் 05.03.1944 — மறைவு 12.12.2006

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (11.01.2007) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

17/1, சபாபதி வீதி,
கொக்குவில். (65892)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி தங்கம்மா சீவரத்தினம்

மண்ணில் 01.10.1941 — விண்ணில் 12.12.2006

அன்னையோர் ஆலயமாய்
அன்னமதை ஊட்டிய அமுத நாயகி
ஆறுதல் தந்த ஆனந்த கீதநாயகியே
ஆறாத் துயரில் அன்னை ஆத்மா பரமபாதமே
முப்பத்தொரு நாள்கள் முடிந்து போனதே.
முதல்வி! உன் மறைவில் மூழ்கி
ஆல விருட்சமாய் நீர் வாழ
உங்கள் நிழலில் வளர்ந்த விழுதுகள் இங்கே
நினைவில் ஒன்றி வாழ்ந்திட முடியாமல்
வாடிநிற்கின்றதே.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தாவடி வடக்கு,
கொக்குவில். (65896)

## மரண அறிவித்தல்கள்

### பர்ணாந்து அருளானந்தம்

(ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன்ட்)



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பர்ணாந்து அருளானந்தம் நேற்று (10.01.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நேசம்மாவின் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, தம்பிஐயா, இராசநாயகம், அன்னபூரணம், நவரட்ணம், பூமணி, தர்மபிரகாசம் (ராசு) மற்றும் மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஞ்சன், பேளிருக்மணி, மேரிவசந்தா, மேரிபொய்சி, சந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இதயராணி, ஜெயானந்தன், ஆனந்தராசா, அமிர்தராசா, உமா ஆகியோரின் அன்பு மாமனும் ஜிவிந், சியெத், தர்சி, கார்த்திகா டிலான், நிஷான், றெக்சன், பொவிலா, பொவில்ராஜ், றொமிலா, ஸ்ரெபான், நிருபா, நிருஷா, குணசீலன், அருள் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.01.2007) வியாழக்கிழமை பி.ப 3மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (65953)

தகவல்:
ப.ஆனந்தராஜா (மருமகன்).

### திருமதி கந்தசாமி தங்கரத்தினம்



கரம்பைக்குறிச்சி,வரணியைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி,நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி தங்கரத்தினம் அவர்கள் 10.01.2007புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான செல்லையாப் பத்தர் - இரத்தினம் தம்பதியரின் ஏகபுத்திரியும் அமரர்களான செல்லையப் பத்தர்- தங்கம்மாவின் மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமிப்பத்தரின் அன்பு மனைவியும் ஸ்ரீதரன் (ஆசிரியர் ,யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), பகவதி ஆகியோரின் பாசமிகுதாயும் கலைவாணி, தவகுமார் (ரூபா பன்முகவர்த்தகம்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பொன்னையாப் பத்தர்), திருநாவுக்கரசுப்பத்தர் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் சந்தானலட்சுமி , காலஞ்சென்ற ஆறுமுகசாமிப்பத்தர், நவரத்தினசாமி, மகாலிங்கம்பத்தர், முத்துலட்சுமி,சோதிலிங்கம், தனலட்சுமி,இராஜேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் நித்தியாரணி, நிரோஜிதன், மயூரி, தனஞ்செயன், மேகலா, தினேஷ் ஆகியோரின் நேசத்துக்குரிய பேர்த்தியுமவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று(11.01.2007) வியாழக்கிழமை பி.ப. 1.30மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36, சேர்பொன் இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி.

தகவல்:
க.ஸ்ரீதரன்
(மகன் - ஆசிரியர்,
யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுத்தந்த போர்நிறுத்த உடன்படிக்கையை கிழித்தெறியுங்கள்!

## நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜன. 10

தேசத்திற்கு விரோதமான முறையில் செய்துகொள்ளப்பட்ட -

புலிகள் தொடர்ந்தும் வன்முறை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல கருவியாகப் பயன்படுத்துகின்ற -

சர்வதேச மட்டத்தில் புலிகளுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்த -

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 5 வருடங்களை நிறைவுசெய்கிறது. ஐந்து வருடங்கள் முடிவடையும் முன் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அரசு கிழித்தெறிய வேண்டும்.

- இவ்வாறு ஜே. வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நேற்றுமுன் தினம் நாடாளுமன்றில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

தேசத்துரோகமான யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு 5 வருடங்கள் நிறைவடையவுள்ளன. இந்த ஒப்பந்தத்தைப் பயன்படுத்தித்தான் புலிகள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகள் சமாதானத்தை விரும்புவதாகக் கூறிக்கொண்டு வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். புலிகளின் இரட்டை வேடத்தை அரசு இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. புலிகளை அடக்க அரசு நடத்தும் தாக்குதல் நடவடிக்கை போதாது.

இப்போது புலிகளின் வன்முறை நடவடிக்கைகள் தெற்கிற்கும் விரிவடைந்து விட்டன. வடக்கு - கிழக்கில் மக்களைக் கொல்லுவதுபோல் தெற்கிலும் மக்களைக் கொல்லப் புலிகள் முடிவுசெய்துள்ளனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கின்ற நிலையில்தான் புலிகள் இந்த மாதிரியான வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அப்படியென்றால் இந்த ஒப்பந்தம் எதற்கு? அரசு அதை உடனடியாகக் கிழித்தெறியவேண்டும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் சர்வதேச மட்டத்தில் புலிகளுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது. அமைதிப் பேச்சின் அனுசரணையாளரான நோர்வேயினர் புலிகளுக்குப் பல உதவிகளைச் செய்துள்ளனர்.



பெறுமதிவாய்ந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளிட்ட பல பொருள்களை அவர்கள் புலிகளுக்கு வழங்கியுள்ளனர்; யுத்தப் பயிற்சியையும் வழங்கியுள்ளனர். இந்தத் தகவலை கருணா அம்மான் தெரிவித்துள்ளார். இப்படியான நோர்வேயை சமாதானப் பேச்சின் அனுசரணையாளராக நாம் ஏற்கலாமா? இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஊடாகவேதான் நோர்வே இவ்வாறான உதவிகளைப் புலிகளுக்குச் செய்துள்ளது. உடனடியாக இந்த ஒப்பந்தங்களை அரசு கிழித்தெறிய வேண்டும்.

- இவ்வாறு விமல் வீரவன்ஸ தெரிவித்தார். (ஐ)

# இலத்திரனியல் பொருள்களை பஸ்களில் எடுத்துச்செல்லத் தடை

ரயில்கள், பஸ்கள் என்பவற்றில் பயணம் செய்வோர் இலத்திரனியல் பொருள்களைத் தம்முடன் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டிருக்கிறது.

கொழும்பில் பஸ்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து எடுக்கப்பட்டு வரும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக இந்தத் தடை உத்தரவு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பஸ் மற்றும் ரயில்களில் இலத்திரனியல் பொருள்களைக் கொண்டுசெல்ல தடை விதிக்கப் பட்டிருப்பதாக எரிபொருள், போக்குவரத்து மற்றும் ரயில் சேவை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

பெரிய அளவிலான பெட்டிகளில் கொண்டு செல்லப்படும் இலத்திரனியல் பொருள்களை பஸ்கள் மற்றும் ரயில்களில் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. ஆனால், சிறிய கையடக்கத்தொலைபேசி போன்ற பொருள் களை எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்படும் - எனவும் அமைச்சர் தெரிவித்தார். ரயில்களில் 10 கிலோகிராம் எடைக்கு மேலதிகமான எடை கொண்ட இலத்திரனியல் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# நாட்டின் பாதுகாப்புச் செலவினம் பொருளாதாரத்தைச் சீரழிக்கிறது

## மூத்த அமைச்சர் மைத்திரிபால கவலை

கொழும்பு, ஜன. 11

அதிகரித்த பாதுகாப்புச் செலவும் இடம்பெற்றுவரும் போரும் ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தைப் பெருமளவில் பாதித்துள்ளதாகவும் ஒவ்வொரு தடவையும் ஏவப்படும் பல்குழல் எறிகணைகள் நூறு தொழிலாளர்களின் வேலை வாய்ப்புக்களை நாட்டில் இழக்கச் செய்வதாகவும் மூத்த அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அரசு இராணுவ நடவடிக்கையில் ஆர்வம் கொண்டு உள்ளது. எனினும், இறுதித் தீர்வு அரசியல் வழிகளிலேயே எட்டப்பட முடியும். பல்குழல் எறிகணை செலுத்திகளின் தாக்குதலை பார்க்கும்போது எமக்கு 'திரில்லாக' இருக்கலாம். ஆனால், அதற்கு நாம் செலுத்தும் விலைகளை எவரும் எண்ணிப்பார்ப்பதில்லை.

இந்த வருடத்தின் பாதுகாப்புச்செலவு 139.56 பில்லியன் ரூபாய்கள். எனினும், தொடர்ச்சியான விமானத் தாக்குதல்கள், கனரக ஆயுதங்களின் உபயோகத்தை பார்க்கும்போது இது மேலும் அதிகரிக்கலாம் எனத் தோன்றுகின்றது. கடந்த ஓகஸ்ட் மாதத் தில் இருந்து கனரக ஆயுதங்களின் பாவனையை அரசும் விடுதலைப் புலிகளும் அதிகரித்துள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தின் பாதுகாப்புச்செலவு 28 விகிதம் அதிகமானது. ஆனால் 2008 ஆம் ஆண்டுக்குரிய பாதுகாப்புச் செலவு 143.46 பில்லியன் ரூபாய்கள் ஆக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது -என்றார் அவர்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் சில ஊடக நிறுவனங்களின் தலைவர்களையும், பத்திரிகையாளர்களையும், பத்திரிகை ஆசிரியர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. அமைச்சர் அனுர பிரியதர்சனயாப்பாவும் படத்தில் காணப்படுகிறார். (ஐ)

# பஸ் குண்டு வெடிப்புகளை கண்டிக்கிறது அமெரிக்கா

கொழும்பு, ஜன. 11

கடந்த 5ஆம், 6 ஆம் திகதிகளில் பல அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைக் காவுகொண்டு பலரைப் படுகாயப்படுத்திய - சிவிலியன் பஸ்கள் மீதான - தாக்குதல்களை அமெரிக்கா கண்டித்திருக்கின்றது.

இது தொடர்பாக கண்டியில் வைத்து இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் கண் டன அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்றார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்து வேண்டுமென்றே நடத்தப்படும் தாக்குதல்கள், பயங்கரவாத நடவடிக்கைகளே என்பதில் சந்தேகமில்லை.

இச்சம்பவங்களில் இரையானவர்களின் குடும்பங்களுக்கு அமெரிக்கா தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

இந்தப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமுடியாது என்பதை மீள வலியுறுத்துகிறோம். 25வருடகாலப் பயங்கரவாதம் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவேயில்லை. அதேபோல, வாகரையில தற்போது இடம்பெறும் வன்முறைகளும் அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் இலங்கையர்களுக்கு குறிப்பிடத்தக்களவு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கின்றது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் உட்பட இலங்கையின் அனைத்து சமூகத்தவர்களது அபிலாஷைகளையும் நிறைவு செய்யும் பேச்சு மூலமான இணக்கப்பாட்டில் தான் தீர்வு தங்கியுள்ளது என்பது எமது கருத்து.

அமைதிப் பேச்சுகளை மீளத் தொடங்குவதற்கான அடிப்படையாக ஒரு அதிகாரப் பரவலாக்கல் யோசனையை உருவாக்குவதற்கு குறிப்பிடத்தக்க சந்தர்ப்பம் ஒன்றை தற்போதைய சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் தொடரும், அமைதி நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுவது தொடர்பான ஸ்ரீ.ல. சு. க. - ஐ. தே. க. உடன்பாடும் தந்திருக்கின்றன.

யுத்த நிறுத்தத்தை நிலைநிறுத்தி, பேச்சுகள் மீளத் தொடங்குவதற்கு வசதியாக, அதிகாரப்பகிர்வு யோசனைகளைத் தயாரிப்பது தொடர்பான தமது கலந்துரையாடல்களை விரைவுபடுத்துமாறு ஸ்ரீ.ல. சு. க., ஐ.தே.க மற்றும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஆகியவற்றுக்கு அமெரிக்கா வேண்டுகோள் விடுக்கிறது. - என்று உள்ளது. (உ)

# உள்ளூர் மூலிகைகளைப் பயன்படுத்தி குடாநாட்டில் நுளம்புத்திரி உற்பத்தி

காலத்தின் தேவையறிந்து உள்ளூர் வளங்களைக்கொண்டு - இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தி - குடாநாட்டில் நுளம்புத்திரி உற்பத்தி செய்யப்படுகின்றது.



இதனை யாழ்ப்பாணம், சிவலிங்கப்புளியடி, கனகசபை வீதியைச் சேர்ந்த எஸ். தவராசா உற்பத்தி செய்துள்ளார்.

பல வருட முயற்சியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த நுளம்புத்திரியை காலத்தின் தேவை யறிந்து சந்தையில் அறிமுகப்படுத்தினேன் எனப் பெருமையுடன் கூறுகிறார் உற்பத்தியாளர்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளியூர் உற்பத்திகளையே பாவித்துப் பழகிய எம்மக்களுக்கு உள்ளூர் உற்பத்தியில் அவ்வளவாக நாட்டமில்லை. அவர்கள் மத்தியில் நம் உற்பத்திப் பொருள்கள் தரமற்றது என்ற ஒரு மனப்பதிவு உருவாகி உறைந்துவிட்டது.

இதனால் எனது கண்டுபிடிப்பை - உற்பத்தியை - சந்தையில் அறிமுகப்படுத்தப் பெரிதும் தயங்கினேன். ஆயினும் தற்போதைய சூழ்நிலையில் நுளம்புத்திரியின் தேவை மிக அவசியமாக உள்ளது. இதனால் எனது தயாரிப்பை சந்தையில் அறிமுகப்படுத்தினேன். வெற்றிகிடைக்கும் எனவும் நம்புகின்றேன்.

யாழ்.லயன்ஸ் கழகத்தின் ஆதரவிலும் எனது ஒன்றுவிட்ட சகோதரி அ.தேவகியின் உதவியுடனும் எனது உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றேன்.

லயன்ஸ் கழகத்தினர் தாம் நடத்திவரும் மருத்துவ முகாம்களில் என் உற்பத்தியை அறிமுகப்படுத்தி வருகின்றார்கள்

என் தயாரிப்பு முற்றிலும் இயற்கை மூலிகைகளைக்கொண்டே உருவாக்கப்பட்டுள் ளது. வேம்பு, ஆமணக்கு, கையம்கோரை, சாம்பிராணி, குங்குலியம், துளசி. மற்றும் மா போன்றவற்றைக் கொண்டே எமது நுளம்புத்திரி உற்பத்திரி [illegible] நுளம் புகளைக் கட்டுப்படுத்துவதோடு உடல் நலத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தாது.



எதிர்காலத்தில் எனது கண்டுபிடிப்பில் மேலும் பல மாற்றங்கள் செய்து நவீனமயப்படுத்தி சந்தைக்கு விடுவதே நோக்கம்.

தென்னிலங்கை உற்பத்தியுடன் போட்டியிட்டு அது வெற்றிபெறும். அந்த நம்பிக்கையிலேயே நான் அதனை சந்தைப்படுத்தியுள்ளேன்.

சந்திப்பு: உதிஷ்டிரன்

யாழ்ப்பாண மக்கள் எதற்கும் தென்னிலங்கையைச் சாராமல் தமது சொந்த முயற்சி, அறிவு, திறமை, பலம் என்பவற்றை மூலதனமாகக் கொண்டு உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி பல்வேறு உற்பத்திகளை உருவாக்கவேண்டும் என்பதே எனது ஆசை.

இதுவே எமது பொருளாதாரத்தை மேம் படுத்த உதவும் - என்றார்.

# பொங்கலை முன்னிட்டு நானாவிதப் பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.11

பொங்கல் பண்டிகையை ஒட்டி யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளூடாக நானாவிதப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். பிரதேச செயலர் தெரிவித்தார்.

ஒரு கிலோ தீட்டல்பச்சை அசிரி, 2 கிலோ உடையல் பச்சை அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு கிலோ அவல், ¼ கிலோ பயறு, ½ லீற்றர் தேங்காய் எண்ணெய் ஆகிய பொருள்களே விநியோகிக்கப்படவுள்ளன. பொதுமக்கள் தத்தமது கிளைகளில் இப் பொருள்களை உடன் பெற்றுக்கொள்ளலாம் எனவும் யாழ் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (202)

# செயன்முறைக் கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்படவிருந்த செயன்முறைக் கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி இந்தக் கருத்தரங்கு இடம்பெறுமென்று தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளது.

# உருளைக்கிழங்கு விநியோகம்

குருநகர், ஜன.11

யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள உருளைக்கிழங்கு பொது மக்களுக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

ஒரு கிலோ உருளைக்கிழங்கு 50 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை
அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்ட அழைப்பு

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 14.01.2007 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் சபைத் தலைவர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. எனவே, சகல பொதுச் சபை உறுப்பினர்களையும் நலன்விரும்பிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

க.கேதீஸ்வரன் — தலைவர் (சி-51797) டாக்டர் செ.அம்பிகைபாகன் — செயலாளர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14 . 07 . 1936 — இறப்பு 23 . 12 . 2005



திதி: மார்கழிமாத அபரபக்க அட்டமி 11.01.2007

**திருமதி சிவகாமசுந்தரி கந்தையா**
(ஓய்வுபெற்ற அதிபர்)

எங்கள் குடும்பவிளக்கு மறைந்து
ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எங்கள்மனதை விட்டு அகலாது
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல குருக்கள் கிணற்றடி விநாயகரைப்
-பிரார்த்திக்கின்றோம்.

கணேஸ்வரம், அளவெட்டி. (65720) குடும்பத்தினர்.

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA. SRILANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 20.02.2007

### FACULTY OF MEDICINE

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Medicine

| Post | salary scale |
|---|---|
| Senior Lecturer Gr.I | Rs.42, 650 - 7x800 - 48,250/- p.m |
| Senior Lecturer Gr.II | Rs.37,650 - 11x700 - 45,350/- p.m |
| Lecturer (Probationary) | Rs.26,900 - 10x585 - 32,750/- p.m |

Note: In addition to the above Salary the following allowances will also be paid
i. An academic allowance equivalent to 25% of the basic. salary
ii. Cost of living allowance of Rs.1,375/- p.m.

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr. II and above.
II. Membership in Universities Provident Fund and Pension Scheme *in the University system.*
III. Gratuity payments
IV. *Employees' Trust Fund benefits.*
V. Free Medical Services.

Application forms and other details may be obtained from the office of the *Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, Sri-Lanka* either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order draw.. in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
04.01.2007 UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

## மரண அறிவித்தல்

**மார்க்கண்டு சதானந்தன்** (சதா)



(முன்னாள் எழுதுவினைஞர், யாழ். செயலகம், கிளிநொச்சி காணி அலுவகம்)

பெரிய அரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சதானந்தன் 09.01.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-கெங்கைநாயகி (கண்ணாடி ரீச்சர்) தம்பதியரின் அன்பு மகனும் பிலோமினாவின்(முன்னாள் குடியேற்றத்திட்ட அலுவலர்) அன்புக் கணவரும் கொட்வின், மேரி சேர்ளினா, ஆன்சின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரகுகராணி (கொழும்பு), வனிதாமணி(சாவகச்சேரி), சரவணபவன்(டுபாய்), முத்துக்குமாரசாமி(ஜேர்மனி), ஆனந்தகுமாரசாமி(கமத்தொழில் காப்புறுதிச் சபை, யாழ்.)ஆகியோரின் அன்பு இளைய சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/1B, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 222 9367,
லண்டன் - 0044 2089269916

தகவல்:
மா.ஆனந்தகுமாரசாமி
(சகோதரன்).

## தவறிவிட்டது

சண்முகராசா ஆனந்தராசா என்பவரது அடையாள அட்டை (741501570V) சாதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் யாழ்.நல்லூர் பகுதிக் கண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 021 4590687 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## சென்றல் நர்ஸிங் ஹோம்
திருநெல்வேலி
மேலும் ஒரு சேவையாக அம்புலன்ஸ் வசதி

யாழ் நகர், வலிகாமம் பகுதி மக்களுக்கு வழங்கப்படுகிறது. வீட்டிலிருந்து வைத்திய சாலைக்கும், வைத்திய சாலையிலிருந்து வீட்டிற்கும் செல்வதற்கு சேவை வழங்கப்படும்.

விவரங்களுக்கு: தொலைபேசி இல. 222 2263
அல்லது நேரில் தொடர்புகொள்ளவும்.

## தவறிவிட்டது

ஆனைக்கோட்டை வீதி,கொக்குவில் மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வி வனிதா அரசுக்கோன் என்பவரது தேசிய அ.அட்டை (596291732V) 08.01.2007 அன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## வேலை ஆள் தேவை

தையல் மெசினில் தைக்கக்கூடியவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

603, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவு கூரல்

எமது ஆசிரிய வட்ட உறுப்பினர்
செல்வி செ.ஜெயபாமினி
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் சங்கரப்பிள்ளை செல்லையா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மத்திய கல்லூரி. ஆசிரிய வட்டம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
சுப்பிரமணியம் மணிவாசகன்
தோற்றம்
30 - 04 - 1944
மறைவு
15 - 12 - 2006

எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தந்தி மூலமும் தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலி மூலமும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இன்று (11.01.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவசக்தி வாசா,
கோப்பாய் தெற்கு,கோப்பாய். தகவல்: குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



நிஜமாய் 30.12.1979 — நினைவாய் 11.01.2005

அமரர்
**செல்வராஜா தீபன்**
(யாழ்.பல்கலைக்கழக
இறுதி வருட முகாமைத்துவத்துறை
மாணவன்)

நண்பனே...
நடப்பது தான்
நடக்கும் என்றால்
நாமழுது என்ன பயன்...?
நடக்கின்றோம் உன்
நினைவுகளுடன்...

நண்பர்கள்,
2001/2002 கல்வியாண்டு,
[illegible]
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
(சி-51813)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி துஷிதா - ரகுமார்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் சுப்பிரமணியம் மணிவாசகன்

13.12.2006 புதன்கிழமை இறைபதம் எய்தினார். அவர்களின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை.
(65563)

## நான்காம் வருட நினைவலைகள்

தோற்றம் 16 - 07 - 1943 — மறைவு 11 - 01 - 2003



**அமரர் சபாபதி நாராயணன்**
(ஓய்வுபெற்ற கிராமசேவையாளரும், சமாதானநீதிவானும்)

கடந்துவிட்ட நான்காண்டுக்குள் கண்டுகொண்ட உலகங்கள் சிந்திக்கவைத்த அனுபவங்கள் உங்களை நாம்சிந்திக்காதிருக்கவும் விடவில்லை அப்பா! உருவமாய் எங்கள் அருகிருந்து நீங்கள் அன்பு காட்டாவிடினும் அருவமாய்இருந்து எமக்கு நல்வழிகாட்டுவீர்கள் என்ற ஓர் அபார நம்பிக்கையோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,வடலியடைப்பு. மனைவி, பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 . 02 . 1975 — அழிப்பு 11 . 01 . 2006



திதி: துதியை 31.12.2006

**செல்வி கணபதிப்பிள்ளை பவளராணி** (B.A.)
(சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், மட்டுவில் வடக்கு J\313)

*பெற்றதாய் கதறியழ பிரியமனம் வந்ததுவோ?*
*பெருமை பெற வளர்ந்து விட்டு இடை நடுவில் பிரிந்தனையோ!*
*பிறந்த மண்ணை விட்டகல முடியாத உம் உள்ளம்*
*பிறந்த பந்த பாசமெல்லாம் விட்டகன்று ஓராண்டானதுவோ?*

மெய்கண்டான் வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (65859) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 01 . 05 . 1973 — விநாயகரடியில் 12 . 12 . 2006



திதி: அபரபக்க ஸப்தமி

**அமரர் சதானந்தன் கலைச்செல்வன்**
(பழர்பதி பிள்ளையார் பல்பொருள் வாணிப உரிமையாளர், மல்லாகம்)

எமது குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்து எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வத்தை இன்று நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம். உடல் மறைந்து போனாலும் உம் உணர்வுகள் எம் நெஞ்சம் உள்ளவரை ஒளி வீசிக் கொண்டே இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

மில்லேன், ஏழாலை மேற்கு,
ஏழாலை. (65859) மனைவி, பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 . 03 . 1954 — இறப்பு 23 . 12 . 2005



**அமரர் நல்லதம்பி தர்மலிங்கம்**
திதி: தேய்பிறை அட்டமி

*நெஞ்சில் எமை வைத்து நேசித்து*
*நெறிநிற்க ஒளியிந்து*
*விஞ்சுபுகழ்க் கலையிந்து கடமையிந்து*
*விருப்புடனே எம்பணிகள்*
*யாவும் செய்து இன்று*
*உருகியழ வைத்து விட்டு*
*ஓடிச் சென்ற உயரமுதே! உயிரனைய*
*தந்தாய் உங்கள்*
*அடி பணிந்து அஞ்சலித்து அன்பால் இந்த*
*அருந்தமிழ்ப்பா மாலை தனை*
*அமைத்துப் பாத*
*மலர் வைத்தோம்! ஏற்றருள்க!*
*அமைதிகொள்க.*

தேவாலய வீதி,
சாவகச்சேரி. (65539) - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# சுயாதீனக் கற்றலுக்குரிய சூழலை உருவாக்குங்கள்!

கடந்த இருபது வருடகால கொடூர யுத்தத்தால் உயிர், உடைமைகளை இழந்து தவிக்கும் வடபுலத்துத் தமிழ் மக்களின் அழியாச் சொத்தாக விளங்குவது கல்வி. அதையும் அழிவுறச் செய்யும் நிலைக்கு நிலைமை மோசமாகப் போய்க் கொண்டிருப்பது ஒட்டுமொத்தத் தமிழர்களையும் வேதனைப் பட வைக்கும் விவகாரம்.

யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் வடக்கில் கல்விச் செயற்பாடுகள் மீண்டும் பாதிப்புறும் இக்கட்டு - புறச்சூழல் - கருக்கட்டி உருக்கொண்டிருப்பது துலாம்பரமாகத் தோற்றத் தொடங்கியுள்ளது.

கடந்த ஐந்து மாதங்களாக வடபுலத்தின் கல்விக் கோயிலான யாழ். பல்கலைக்கழகம் தனது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது முடங்கிப் போய்க்கிடக்கின்றது.

அதை மீள இயங்க வைப்பதற்கு யாழ். கல்விச் சமூகம் மிகுந்த கஷ்டத்துக்கு மத்தியில் - நெருக்கடிகள், அச்சுறுத்தல்களுக்கு இடையில் - மேற்கொண்ட முயற்சிகள் அவமாகப் போகும் அவலம் உருவாகியிருக்கின்றது.

மாணவர்கள் காணாமற்போதல், கடத்தப்படல் போன்ற அனர்த்தங்களை நிறுத்தி யாழ். பல்கலைக்கழகம் மீண்டும் இயங்க அனைவரும் உதவவேண்டும் என்று பகிரங்கமாகக் கெஞ்சிக் கேட்கும் பரிதாப நிலைக்குக் கல்விச் சமூகம் தள்ளப்பட்டிருப்பதும் தாங்க முடியாத கவலைக்குரியது.

யாழ். பல்கலைக்கழக பதில் உபவேந்தரும், பீடாதிபதிகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மாணவர்கள் எதிர்கொள்ளும் மோசமான ஆபத்து நிலை சூ... வெளிப் படுத்தப்பட்டிருக்கின்றது.

மாணவர்கள் கடத்தப்பட்டு காணாமற் போகும் நிகழ்வுகள் பெரும் மனத்துயரைத் தந்திருப்பதாகவும் மாணவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி அலைகளை அது ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

யார், எப்போது, என்ன காரணத்துக்காக, எவ்விடத்தில் கடத்தப்படுவார்கள் அல்லது காணாமற் போவார்கள் என்ற தவிர்க்க முடியாத பீதி, மாணவர்களிடையே பரவியுள்ளதைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

இவ்வாறான அச்சம் நிறைந்த சூழ்நிலையில் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பது மிகுந்த சிரமம் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர் என்ற யதார்த்தத்தையும் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

மீண்டும் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு தமக்கு அழுத்தம் தந்து அது தொடர்பான தமது நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவு தந்த மாணவர்கள் இப்போது மனம் குழம்பிப் போயுள்ளனர் என்பதையும், இதனால் திட்டமிட்டபடி எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிப்பது கேள்விக் குறியாக உள்ளது என்பதையும் கூட அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள்.

இளம் மாணவர்களை - இளைஞர்களை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோர் நெருப்பை மடியில் கட்டிக்கொண்டோர் போல அச்சத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

பாடசாலை மாணவர்களாகட்டும், பல்கலைக்கழக மாணவர்களாகட்டும், அவர்கள் இளம் தலைமுறையினர். அவர்களைக் கையாள்வதில் பொறுப்புணர்வும், அவதானமும், சகிப்புத் தன்மையும் அவசிய மானவை.

தாம் பாதுகாப்பாக - அச்சம், நெருக்கடி, அச்சுறுத்தல் போன்ற அழுத்தங்களின்றி - சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் கற்றல் செயற் பாடுகளில் ஈடுபட உரிமை உள்ளவர்கள் என்ற நியாயமான அபிலாஷையும், எதிர்பார்ப்பும் மாணவ சமுதாயத்துக்கு உண்டு. அதைத் தவறு என்று எவருமே கூறமுடியாது.

அதை நிறைவுசெய்து கொடுப்பது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பும், கடமையுமாகும். அதைச் செய்யத் தவறிவிட்டு - அல்லது கற்றல் செயற்பாடுகளுக்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில் உதாசீனமும், அசிரத்தையும் காட்டிவிட்டு - மாணவர்களை நோவதிலோ அல்லது அவர்களை நெருக்குவதிலோ அர்த்தம் இல்லை.

பத்திரிகைச் சுதந்திரம், கருத்து வெளியிடும் உரிமை ஆகியன அனைவருக்கும் உண்டு. அதை உறுதிப்படுத்துவேன் எனக் கொழும்பில் பத்திரிகை ஆசிரியர்களை நேரில் சந்திக்கும்போது சூளுரைக்கின்றார் இலங்கைத் தீவின் ஜனாதிபதி.

அப்படியிருக்க, தமது கற்றல் செயற்பாடுகளுக்கான மாணவர்களின் அடிப்படைத் தேவைகள், உரிமைகள், எதிர்பார்ப்புகள் போன்றவை தொடர்பான அவர்களின் கொதிப்புக்களை - எண்ணங்களை - கருத்துகளை - வெளிவராமல் அமுக்குவதும் அதற்குத் தற்போதைய அவசரகாலச் சட்ட விதிகள் மற்றும் நெருக்குவாரங்களைப் பயன்படுத்துவதும் இங்கு அரங்கேறுகின்றன. இத்தகைய கெடுபிடிப் போக்கு 'தற்காலிக நிம்மதியை' சில தரப்புகளுக்குத் தரலாம். ஆனால், அவற்றின் பின்னணியில் சீழ் பிடித்து ஆழ வேரோடத் தொடங்கும் மோசமான அதிருப்தியை இப்போக்கு கட்டுப்படுத்தவேமாட்டாது. அப்பிரச்சினைகள் சமூகத்துக்குள்ளேயே விஸ்வரூப வடிவெடுத்து, மோசமாக வெடிக்கும்போது எதிர்கொள்ள முடியாத நிலையைத் தோற்றுவித்து விடுவது இயல்பு.

எனவே, மாணவர்களின் பிரச்சினையைச் சீருடைச் சிந்தனையில் அணுகாமல், அவர்களுக்குரிய நியாயமான உரிமைகளை உள்வாங்கி, அவற்றின் அடிப்படையில் அணுகும் பொறுப்பு வாய்ந்த அதிகார வர்க்கம் இன்று தேவைப்படுகின்றது. அதேசமயம், இளம் மாணவ சமுதாயத்தைத் தவறான வழியில் செல்லாமல், நேரிய பாதையில் வழிப்படுத்தும் சமூக வழிகாட்டலும் தவறாமல் பின்பற்றப்பட வேண்டும்.

மாணவர் தம் கொதிப்புகளையும், ஆதங்கங்களையும் வெளிப்படுத்த விடாமல் அவர்களை அடக்கித் தம்மிஷ்டப்படி செயற்பட்டாக வேண்டும் என்று நெருக்குவாரப்படுத்துவோர், அந்த மாணவர்களின் அடிப்படை உரிமையான கற்றல் செயற்பாட்டை அவர்கள் மேற்கொள்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் தமக்குள்ள பொறுப்பையும், கடமையையும் முதலில் ஒழுங்காக நிறைவேற்றிய பின்னர், மாணவர்கள் மீது தமது வழிகாட்டல் அழுத்தத்தைத் திணிக்கலாம். அதைச் செய்யாமல் தமது மேலிடத்தைத் திருப்திப்படுத்துவதற்காக மாணவர் மீது அழுத்தம் பிரயோகிப்பது அர்த்தமற்றது. இன்றைய நாகரிக உலகில் ஏற்புடையதும் அல்ல.

# வடக்கு - கிழக்கு இணைப்பு அரசின் நிலைப்பாடு என்ன?

## திட்டவட்டமாக வெளியிடக் கோருகிறார் ஐ.தே.கட்சி எம்.பி.



கொழும்பு, ஜன. 11

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக அரசின் நிலைப் பாடு என்னவென்பதை அரசு இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப் பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

கொள்கைகளையும், திட்டங்களையும் வகுக்கக்கூடிய - அவற்றை வெளியிடக்கூடிய - முதுகெலும்பு அரசுக்கு இல்லை என்றும் நீதிமன்றமே கொள்கைகளை அரசின் சார்பில் வகுக்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று வடக்கு - கிழக்கு நிலைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீது இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இதுபற்றித் தொடர்ந்து கூறுகையில்-

வடக்கு - கிழக்கு பிரிப்புத் தொடர்பாக இச்சபையில் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இச்சமயம் இது தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்னவென்று எவருக்கும் தெரியாது. அது தொடர்பான நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் முதுகெலும்பு அரசிற்கில்லை.

**பிரச்சினையை எப்படித் தீர்க்க முடியும்**

ஏதேனும் கொள்கையை வகுக்க வேண்டும் என்றால் அப்பணியை அரசு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கின்றது. நீதிமன்றம் கொள்கை வகுத்துக்கொடுக்கின்றது. அக்கொள்கை விமர்சனத்திற்கு உள்ளாகும்போது 'இது நீதிமன்றத் தீர்ப்பு அதனை மீறமுடியாது' எனக் கூறி அரசு நழுவி விடுகிறது.

இந்தப் பிரச்சினைக்கு இதுதான் தீர்ப்பு என்று அடித்துச் சொல்லக் கூடிய தைரியம் - முதுகெலும்பு - அரசிற்கு இல்லவே இல்லை.

இப்படியான ஒருஅரசால் எப்படி நாட்டின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்? இதுவரை காலமும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன்வைக்காமல் நழுவிச் சென்றது போதும். இனியாவது தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைக்க வேண்டும்.

நாம் சமாதானத்தை மிகவும் துணிச்சலுடன் ஏற்படுத்திய சமயம் பலகட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. ஆனால், இப்போது இந்த அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிக்கு பிரதான எதிர்கட்சியான நாம் ஆதரவு வழங்க முன்வந்துள்ளோம். அரசுடன் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளோம். இதை அரசு பயன்படுத்தவேண்டும்.

வன்முறைகளுக்கு எதிராக அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கையை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், இந்த நடவடிக்கையின்போது அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்கப்படவேண்டும் - என்றார். (ஐ)

# ஆனைக்கோட்டையில் நேற்று கிளைமோர் தாக்குதல்

ஆனைக்கோட்டைச் சந்திக்கும் கூழாவடிக்கும் இடையில் நேற்றுக்காலை 7.45 மணியளவில் கிளைமோர் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரோந்து சென்ற படையினரை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் ஏற்பட்டுள்ள சேதவிவரம் தெரியவரவில்லை.

சிறிய ரக மோட்டார் சைக்கிளில் பொருத்திவைக்கப்பட்ட கிளைமோரே வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

இச் சம்பவத்தையடுத்து நவாலி - ஆனைக்கோட்டை பிரதான வீதி, யாழ். - மானிப்பாய் பிரதான வீதி என்பன போக்குவரத்துக்கு சிறிதுநேரம் தடை செய்யப்பட்டிருந்தது. (1-95-202)

# முன்னாள் பிரதம நீதியரசர் சர்வானந்தா காலமானார்

மெல்போர்ன், ஜன.11

முன்னாள் பிரதம நீதியரசர் சுப்பையா சர்வானந்தா ஆஸ்திரேலியாவில் நேற்றுக் காலமானார்.

நீண்ட காலம் சட்டத்துறையில் பணியாற்றிய இவர் உயர்நீதிமன்ற நீதியரசராகவும் சட்டத்தரணிகள் சங்க ஆலோசகராகவும் மேல்மாகாண சபையின் ஆளுநராகவும் பணியாற்றிவர். "தேசமான்ய" கௌரவ விருதினையும் பெற்றவர்.

ஊர்காவற்றுறை, கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்ட சர்வானந்தா ஓய்வு பெற்ற பின்னர் ஆஸ்திரேலியாவில் வசித்து வந்தார். (1)

# கணக்காளர் சேவை பரீட்சை நிலையம் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.11

வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவிருந்த இலங்கை கணக்காளர் சேவை வகுப்பு II தரம் II ஆள் சேர்ப்புக்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நிலையம் தவிர்க்க முடியாத காரணத்தால் யாழ். மத்திய கல்லூரிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளை மத்தியகல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் கேட்டுள்ளார். (1-203)

# கிழக்கில் இனி எந்தப் படைமுகாமையும் தாக்கும் வல்லமை புலிகளிடமிருந்து பறிப்பு!

## ஹெல உறுமய தேரர் நாடாளுமன்றில் புளகாங்கிதம்

கொழும்பு,ஜன.11

கிழக்கை நாம் புலிகளிடமிருந்து முற்றாக மீட்டுக்கொண்டோம். எனவே, இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. இப் போது புலிகளிடம் ஒரு முகாம் மீது கூட தாக்குதல் நடத்தும் பலம் இல்லை. அவர்களால் ஒரு பொலிஸ் காவலரண் மீது கூட தாக்குதல் நடத்த முடியாது.

ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலியே ரதன தேரர் நேற்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் இன்றைய நிலை மற்றும் சமாதான முன்னெடுப்புகள் பற்றி சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

போரிட முடியாத நிலையில்தான் புலிகள் தெற்கில் பஸ்களில் குண்டுகளை வைத்து பொது மக்களைக் கொலை செய்கின்றனர். பொதுமக்கள் கொலை செய்யப்பட்டது குறித்துக் கூட தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் இச் சபையில் வருத்தம் தெரிவிக்கவில்லை.

நாங்கள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினோம். அப்போது வடக்கு - கிழக்கு பிரிப்புக் குறித்து அவரிடம் கேட்டோம். அதற்கு அவர் இது நீதிமன்றத் தீர்ப்பு. இலங்கையின் இறைமையை நாம் மதிக்கின்றோம் என்றார். வடக்கு - கிழக்கை இணைப்பதா, பிரிப்பதா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது நாமே. புலிகளுக்கு ஆதரவு வழங்கிய வைகோவுக்கு இன்று அவரது கட்சியே இல்லாமல் போய்விட்டது.

ஜனநாயக ரீதியில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்புடையதல்ல. அந்த ஒப்பந்தம் இந்த நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறவில்லை. எனவே அதை ஏற்க முடியாது.

சோமாதேவி வித்தியாலயம்மீது புலிகள் ஷெல் வீச்சு நடத்தி ஒரு ஆசிரியை கொல்லப்பட்டது குறித்து தமிழரசுக் கட்சி இச் சபையில் வருத்தம் தெரிவிக்க வில்லை - என்றார். (ஐ-2)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் 6ஆம், 7ஆம் அணிகளின் மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விளையாட்டு விஞ்ஞான அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த இக் கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (1-202)

# குடாநாட்டு மாணவர் பாவனைக்கு 36,000 கொப்பிகள் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜன.11

குடாநாட்டில் கல்விபயிலும் மாணவர்களுக்கு வழங்கவென 36ஆயிரம் அப்பியாசக் கொப்பிகளும் ஐந்து லட்சம் பேனா மற்றும் பென்சில்களும் கப்பல்மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இக் காகிதாதிகளை பாடசாலைகளுக்கு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். வலயத்துக்கு 13ஆயிரத்து இருநூறு கொப்பிகளும் -

வலிகாமம் வலயத்துக்கு 9 ஆயிரம் கொப்பிகளும் -

வடமராட்சி வலயத்துக்கு 6 ஆயிரம் கொப்பிகளும் -

தென்மராட்சி வலயத்துக்கு 4 ஆயிரத்து எண்ணூறு கொப்பிகளும் -

தீவகத்துக்கு மூவாயிரம் கொப்பிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இக் கொப்பிகள் எண்பது பக்கங்களைக் கொண்டவை எனவும் அவை 15 ரூவாவுக்கும், பேனைகள் 10 ரூபாவுக்கும் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் குடாநாட்டில் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளில் கற்பதாகவும் தற்போது எடுத்துவரப்பட்ட கொப்பிகள் பற்றாக்குறையாகவுள்ளதாகவும் தெரிவிகப்படுகிறது. (அ-வ)

# நல்லூர்க் கோட்ட அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.11

நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலவசச் சீருடை, இலவச பாடப் புத்தகங்கள் ஆகியன தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றது.

அதேவேளை -

யாழ். கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் தமது பாடசாலைகளுக்கான பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் காகிதாதிகளை நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

**நாளை**

*மார்கழி - 28*
*வெள்ளிக்கிழமை*
*12.01.2007*
*திதி : அட்டமி*
*காலை 6.45*
*நட்சத்திரம் : சித்திரை*
*பிற்பகல் 01.08*
*சுபநேரம் : 06.33 - 08.03*
*ராகுகாலம் : 11.03 - 12.33*

# கோப்பாயில் கொல்லப்பட்டவரின் சடலத்தை அந்தியகால நிறுவனத்திடம் ஒப்படைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன.11

கோப்பாய், கைதடி-மானிப்பாய் வீதியில் கடந்த 5ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை அந்தியகால சேவை நிறுவனம் மூலம் அடக்கம் செய்யுமாறு யாழ் நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

கோப்பாயை வசிப்பிடமாகவும் ஆனைக்கோட்டையைச் சொந்த இடமாகவும் கொண்ட கந்தையா ரவீந்திரன் (வயது 40) என்பர் கடந்த 5ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

அவரின் சடலத்தை அந்தியகால சேவை நிறுவனம் மூலம் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யுமாறு வன்னியில் ஆசிரியராகக் கடமையாற்றும் அவரது மனைவி யாழ். நீதிவானுக்கு 'பக்ஸ்' மூலம் விண்ணப்பித்திருந்தார்.

இந்த விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிவான் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை அந்தியகால சேவை நிறுவனத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசிக்கான போலி அட்டைகளை விற்பனை செய்த மூவர் நெல்லியடியில் கைது!

யாழ்ப்பாணம், ஜன.11

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் திருடப்பட்ட ''டயலொக்'' கைத்தொலைபேசிக்கான போலியான மீள் நிரப்பும் அட்டைகளை விற்பனை செய்த மூவர் நெல்லியடியில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நகரில் உள்ள இந்த அட்டைகளை விற்பனைசெய்யும்பிரபல முகவர்நிலையம் ஒன்று கடந்த பெப்ரவரி மாதத்தில் உடைக்கப்பட்டு அங்கிருந்து 7லட்சம் ரூபா பெறுமதியான அட்டைகள் திருடப்பட்டிருந்தன.

அந்தத் திருட்டுத் தொடர்பாக குறிப்பிட்ட முகவர், தலைமையகத்துக்கு தெரிவித்ததையடுத்து அந்த அட்டைகள் செயலிழக்கம் செய்யப்பட்டிருந்தன.

தற்சமயம் அந்த அட்டைகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி திருடப்பட்ட அட்டைகளை விற்பனை செய்யும் முயற்சியில் சம்பந்தப்பட்ட கோஷ்டி ஈடுபட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

அவர்களில் சிலர்நெல்லியடியில் போலி அட்டைகளை - திருடப்பட்ட அட்டைகளை-விற்பனை செய்ய முயன்றவேளை வகையாக மாட்டிக் கொண்டனர்.

இந்த அட்டைகளை விற்பனை செய்து வரும் முகவர் ஒருவரிடம் சென்ற மூவர் தம்வசம் இருந்த 60அட்டைகளை விற்பனை செய்ய முயன்றனர். அந்த முகவர் அவற்றைக் கொள்வனவு செய்து, ஒன்றை கைத்தொலைபேசியில் பொருத்த முனையும்போது, பிரஸ்தாப நபர்கள் ஓட முயன்றனர்.

முகவர்நிலைய ஊழியர்கள் அவர்களைக் கலைத்துச் சென்றனர். நெல்லியடி பஸ் நிலையத்தில் நின்ற படையினரின் உதவியுடன் மூவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நெல்லியடிப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் இன்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட இருப்பதாக அறியவந்தது. அ-1)

# கல்கிஸையில் 40 பேர் கைது

கல்கிஸைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது 10 தமிழர்கள் உட்பட 40 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கல்கிஸை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் இரவு 10 மணி தொடக்கம், நேற்று அதிகாலை வரையில் இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தேடுதலின்போது கைது செய்யப்பட்ட 10 தமிழர்களில் இருவர் பெண்கள் ஆவர். கைது செய்யப்பட்ட 40 பேரும் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். அவர்கள் தங்களை உறுதிப்படுத்தும் வகையில் ஆவணங்களைச் சமர்ப்பித்ததும் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-04)

## வடக்கு - கிழக்கு பிரிப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாடு.

★ நிபுணர்கள் குழு சமர்ப்பித்த ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து சர்வகட்சி மாநாட்டு பிரதிநிதிகள் குழுவின் தலைவரால் கருத்தொருமித்த தீர்வு யோசனை ஒன்றைச் சமர்ப்பிக்க முடியும் என்று நம்புகின்றேன்.

★ இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்து இந்தியாவின் கவலையை ஜனாதிபதி மஹிந்தவிடம் தெரிவித்தேன்.

★ வடக்கு - கிழக்கில் நிலவும் மனிதாபிமானப் பிரச்சினைக்கு முடிவு காணப்பட வேண்டும் என்பதில் இந்தியாவுக்கு உள்ள அக்கறையையும் அவரிடம் தெரிவித்தேன்.

★ இந்த நாட்டில் வாழும் சகல இனமக்களுக்கும் ஏற்புடையதான அரசியல் திர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பது குறித் தும் கலந்துரையாடப்பட்டது.

**அதிகாரப் பகிர்வுமூலம் தீர்வு காணமுடியும் என்று மஹிந்த நம்பிக்கை**

இதேவேளை-

தேசியப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் விரைந்து தீர்வு காண வேண்டும் என்பதில் தனக்குள்ள அக்கறையை ஜனாதிபதி மஹிந்த இந்திய அமைச்சரிடம் எடுத்து ரைத்தார் என்றும் -

அதன் பொருட்டு சர்வகட்சி மாநாட்டின் செயற்பாடுகளுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது என்றும் -

அதிகாரப் பகிர்வு முறை ஒன்று சம்பந்த மாக இணக்கப்பாடு காணப்படும் என்பதில் தமக்கு நம்பிக்கை உண்டென்றும் -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய வெளியுறவு அமைச்சரிடம் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் குறித்து நீண்ட நேரம் இருவரும் பரஸ்பரம் கருத்துப் பரிமாறிக் கொண்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (அ)

## இந்தியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த இக்கப்பலில் இருந்து நேற்று இறக்கப்பட்ட உருளைக்கிழங்கு, நகரில் வைத்து விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிலோ கிழங்கு 120 ரூபாய்ப்படி விற்பனை செய்யப்பட்டது.

ஒகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக போக்குவரத்துக்கள் தடைப்பட்டதையடுத்து, அரச அதிபரே பொருள்களைக் கப்பலில் எடுத்து வந்து விநியோகித்து வந்தார்.

முதல் தடவையாக தனியார் வர்த்தகர் கப்பல் மூலம் பொருள்களை எடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-1)

## நேற்று பாடசாலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகள், அரச அலுவலகங்கள் ஆகியன ஆரம்பமாகும் சமயத்தில் - இந்தச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றமையால் பிரதான வீதிகளில் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றதைக் காணமுடிந்தது.

யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளில் எதுவித தடங்கல்களும் இன்றி நேற்றுக் கல்விச்செயற்பாடுகள் இடம்பெற்றன என்று கல்வி வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும், ஒருசில பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களின் வரவு குறைவாக இருந்தது. ஒருசில பாடசாலைகளுக்குச் சென்ற உயர்வகுப்பு மாணவர்கள் வீதிகளில் மறிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்என்றும் தெரியவந்தது. ஏனைய வகுப்பு மாணவர்கள் முழு அளவில் பாடசாலைகளுக்கு சமுகமளித்திருந்தனர் என்றும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சில இடங்களில் பாடசாலை மாணவர்களின் புத்தகப்பைகள் படையினரால் தீவிரமாகச் சோதனையிடப்பட்டன என்று தெரியவந்தது. இதன் காரணமாக சில மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வழியில் வீடுதிரும்பினர் என்றும் தெரி விக்கப்படுகின்றது.

நேற்றுத் திடீரென சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டதால் மாணவர்களும், பொதுமக்களும் ஒருவித பயபீதியுடன் வீதியில் பயணித்ததை அவதானிக்க முடிந்தது. (ஐ-8-வ)

## வடக்கு - கிழக்கு இணைப்புக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கு நிலைமை தொடர்பான விசேட விவாதம் நேற்று நாடாளுமன்றில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு ஹக்கீம் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

''வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினையடுத்து நாம் இதைக் கவனமாகக் கையாள வேண்டிய நிலைக்குக் கட்டாயமாகத் தள்ளப்பட்டுள்ளோம்.

இந்த விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சந்தித்துப் பேசின. வடக்கு - கிழக்கு இணைப்பால் முஸ்லிம்களுக்கு இருக்கின்ற பாதிப்புகள் பற்றியும், பிரிப்பால் இருக்கின்ற பாதிப்புகள் பற்றியும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

வடக்கு - கிழக்கு இணைந்திருந்த போது முஸ்லிம்கள், புலிகளால் அனுபவித்த கொடுமைகளை நாம் மறந்துவிட முடியாது.

முஸ்லிம்களின் உரிமை தொடர்பாக - அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் தொடர்பாக - தமிழ்த் தலைவர்கள் இணங்கியிருந்தபோது, முஸ்லிம்களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்ட போது ஆயுதக்குழு உருவாகியதால் அந்த ஒப்பந்தங்கள் கிடப்பில் போடப்பட்டன.

மொத்தத்தில் வடக்கு - கிழக்கு இணைப்பு ஒப்பந்தமானது முஸ்லிம்களைப் பல வழிகளில் பாதித்தது.

சமாதானத்தின் மீது முழு நாட்டம் கொண்டு எமது ஆதரவுடன் உருவான ரணிலின் ஆட்சியில் முஸ்லிம் களின் பங்களிப்பை உறுதிப்படுத்த நாம் பல வழிகளில் இறங்கினோம்.

அந்த முயற்சிகளில் ஒன்றாக நாம் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேசினோம். பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற அவர் விருப்பம் தெரிவித்தார். அதற்காக ஒப்பந்தமும் செய்யப்பட்டது. பிறகு அந்த ஒப்பந்தம் மீறப்பட்டது.

இது மாத்திரமன்றி வடக்கு - கிழக்கு இணைந்திருந்த காலத்தில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டனர்.

இந்த நிலையில் நிபந்தனைகள் அற்ற முறையில் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு ஆதரவு வழங்குமாறு எம்மைக் கேட்க யாருக்கும் தகுதியில்லை.

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக நாம் மூலதனமாகக் கொண்டிருப்பது நேர்மையையும், எமக்கு இழைக்கப்பட்ட அநீதியையும் தான்.'' - என்றார். (ஐ)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

''வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டமை தொடர்பாகக் கட்சிகளிடையே பல்வேறுபட்ட கருத்துகள் உள்ளன. சில கட்சிகள் பிரிப்பை விரும்புகின்றன. சில கட்சிகள் அதை எதிர்க்கின்றன.

இந்நிலையில் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் எல்லாக் கட்சிகளுடனும் நாம் பேசிய பின்பே எமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும்.

• இது தொடர்பாக நாம் முதலில் அரசுடன் பேசவுள்ளோம். அடுத்து ஏனைய கட்சிகளுடனும் பேசுவோம். இதனைத் தொடர்ந்து அனேகமாக அடுத்த வாரமளவில் இது தொடர்பான எமது நிலைப்பாடு தெரிவிக்கப்படும்.'' - என்றார். (ஐ)

## சிறியரக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்கள். அதேவேளை குறைந்த எரிபொருளைப் பயன்டுத்தலாம் என்ற சிக்கன நோக்கில் ஆண்களும் இவற்றைப் பயன்டுத்துவது வழக்கம்.

இந்த வகையில் -

யாழ்.வேம்படியில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணியில் ஈடுபட்டுத் திரும்பிய ஆசிரியர்களிடம் இருந்து இத்தகைய மோட்டார் சைக்கிள்களைப் படையினர் பறிமுதல் செய்தனர் என்றும் -

இதுதொடர்பாக படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து அவற்றை மீள வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது என்றும் -

அந்தச் சைக்கிள்களை இன்று பெற்றுக் கொள்ளும் படியும் - கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார். (அ-1)

## வடக்கு - கிழக்கு இணைந்திருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் ஆணை வழங்கவில்லை.

வடக்கிலும் கிழக்கிலும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளரே அதிக வாக்குகளைப் பெற்றுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கு மேற்கொண்ட முறை பிழையானதென்றே உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன மேற்கொண்ட இந்த இணைப்பு அவரைத் தொடர்ந்து வந்த ஜனாதிபதிகளான ஆர். பிரேமதாச, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரது பதவிக்காலத்திலும் தொடர்ந்து இருந்து வந்தது.

உயர் நீதிமன்றம் 2006ஆம் ஆண்டு ஒக்டோபர் 16ஆம் திகதி தீர்ப்பளித்ததன் பின்னர் இதுகுறித்து அமைச்சர்கள் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மங்கள சமரவீர, டியூ குணசேகர, நிமல் சிறிபால டி சில்வா, கலாநிதி சரத் அமுனுகம ஆகியோர்கவலை தெரிவித்து கருத்து வெளியிட்டுள்ளனர்.

சர்வதேச சமூகம் வடக்கு-கிழக்கு பிரிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. இணைத் தலைமை நாடுகளின் தலைவர்கள் வடக்கு -கிழக்கு இணைப்பில் மாற்றமேதும் இருக் கக்கூடாதெனவும் இது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அடிப்படையாக அமையுமெனவும் தெரிவித்துள்ளனர்.

இணைத்தலைமை நாடுகள் வடக்கு-கிழக்கு இணைப்பின் முக்கியத்துவத்தை கண்டு அறிந்து கொண்டே இவ்வாறு தெரிவித்துள்ளன.

வடக்கு- கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை ஏற்றுக் கொண்டே இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. கியூபாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த இந்தியப் பிரதமர் வடக்கு - கிழக்கை பிரிப்பது சமாதான முயற்சிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்துமெனத் தெரிவித்து வடக்கு - கிழக்கைப் பிரிக்கக் கூடாதென்றும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அதை ஏற்றுக் கொண்டுள்ளார் - என்றார்.

## மரண அறிவித்தல்

**வேலுப்பிள்ளை முத்துப்பிள்ளை**

பெரியநாவலடி, கொடிகாமத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை முத்துப்பிள்ளை நேற்று (10.01.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தாமோதரம்பிள்ளை வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் விடத்தல்பளையைச் சேர்ந்த முருகேசு தம்பதியரின் அன்பு மகளும் கொடிகாமத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சிவநாதன், மதியாபரணம், தணிகாசலம், வள்ளிமுத்து, இராசவேல், அமிர்தலிங்கம், யோகராசா, யோகமங்களம், யோகலட்சுமி, திருப்பதி, வளர்மதி ஆகியோரின் தாயும் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம், கனக நாயகம் ஆகியோரின் சிறியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2007) வியாழக்கிழமை கேணியடி, மீசாலை மேற்கில் உள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொடிகாமம் வேவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

•இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


31 ஆவது வருட கல்விச் சேவையில் [illegible]

**விக்னா கல்வி நிறுவனம்**

கே.கே.எஸ்.வீதி (யா/இந்துக் கல்லூரி அருகில்)

**தரம் 6 தொடக்கம் O/L வரை**

★ பெற்றோர், மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஆசிரியர் குழாம்
★ கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்
★ ஒவ்வொரு பிரிவிலும் 30 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
• மாலை 3 - 5.30 வரை அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி.

**விக்னா கல்வி நிறுவனம்**

வரலாறு

திரு. சுதன்

A/L 2007, 2008, 2009

ஆரம்பம்:
13.01.2007 11 மணி

**CHEMISTRY CENTRE**

Temple Rd (Green Park அருகே)

A/L 2009

ஆரம்பம்
11.01.2007
Thurs 4 p.m

அன்பழகன் B.Sc

**BRAIN POWER INSTITUTE**

A/L 2007

LOGIC PAPER CLASS

M.பிரகாஷ்.

ஆரம்பம்:
13.01.2007 சனி 10 a.m.

A/L 2009

பிரிவு II

ஆரம்பம்:
13.01.2007 சனி 8 a.m

**பிறைற்மன் கல்வி நிலையம்**

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்.நகர்

A/L 2009

கலைப்பிரிவு 10am | வர்த்தகப்பிரிவு 1pm

ஆரம்பம் : 13.01.2007 Sat 10am

**நியூநர்டன் அக்கடமி**

கோண்டாவில்.

A/L 2009

கலைப்பிரிவு | வர்த்தகப்பிரிவு

ஆரம்பம்: 13.01.2007 சனி பி.ப. 4 மணி

**BRIGHTMAN**

பிரிவு 2

சிங்களம்

பேராசிரியர் லீலாக்கிருஸ்ணன்

ஆரம்பம்:
13.01.2007 சனி 4.30


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.01.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org